# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

## 1997 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க இலங்கை சமுர்த்தி அதிகாரசபை (திருத்தச்) சட்டம்

[1997 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 28 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

*பாராளுமன்றத்தினால் அச்சிடப் பணிக்கப்பட்டது*

**1997 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 28 ஆந் தேதிய இலங்கைச்சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டுள்ளது.**


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1. அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

**விலை: ரூபா 3.80** **தபாற் செலவு : ரூபா 2.50**

2—D 041882— 1,520 (96/10)

## 1997 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க இலங்கை சமுர்த்தி அதிகாரசபை (திருத்தச்) சட்டம்

(1997 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 28 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

ச.வ.— ஓ 59/96

## 1995 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க இலங்கைச் சமுர்த்தி அதிகாரசபைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக.

1. இச்சட்டம், 1997 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க இலங்கை சமுர்த்தி அதிகாரசபை (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. (இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1995 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க இலங்கை சமுர்த்தி அதிகார சபைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :- 1995 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்கச் சட்டத்தின் 4 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(i) அப்பிரிவின் (ஊ) என்னும் பந்தியில் "வசதிப்படுத்துதல்" என்னும் சொல்லுக்குப் பதிலாக "வசதிப்படுத்துதல்;" என்னும் சொல்லை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(ii) அப்பிரிவின் (ஊ) என்னும் பந்தியை உடனடுத்து பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்:—

"(எ) நிகழ்ச்சித் திட்டத்தின் பயனுகர்களுக்கு பணமாக அல்லது வேறு வகையில் நிவாரணம் வழங்குதல்"

3. 1989 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க சனசக்திச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகளின் கீழ் வழங்கப்பட்டதும் சொல்லப்பட்ட சட்டம் நீக்கஞ் செய்யப்பட்ட தேதிக்கு நேர் முந்திய நாளன்று வலுவிலுள்ளதுமான உரித்துச் சான்றிதழ் ஒன்றை வைத்திருப்பவரும் மாதமொன்றுக்கு இருநூற்றி ஐம்பது ரூபா பணக் கொடுப்பனவொன்றைப் பெறுகின்றவருமான ஒவ்வோராளும் முதன்மைச் சட்டவாக்கத்தில் முரணான எது எவ்வாறிருப்பினும் முதன்மைச் சட்டவாக்கத்தின் கீழ் வகுத்தமைக்கப்பட்ட சமுர்த்தி தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நிவாரணத்திற்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவராதல் வேண்டும். சனசக்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நிவாரணம் பெறும் ஆட்கள் சமுர்த்தி தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நிவாரணத்திற்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்களாவர்.

2—D 041882—1,520 (96/10)

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

4. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாட்டு) ரூபா 1,387 (வெளிநாட்டு) ரூபா 1,849 ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.